
# தமிழ்ச்சிட்டு




தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்



# உங்கள் மடல்கள்

○ “தமிழ்ச்சிட்டு” பறந்துவந்து எங்கள் வங்கியில் உள்ள ஒவ்வொருவர் கைகளிலும் குந்தி, செந்தமிழ்ப் பாட்டிசைத்து, தமிழ்மணம் பரப்பி எல்லாரையும் மகிழ்ச்சியிலாழ்த்தியது. எல்லாரும் உறுப்பினர்களாக ஒப்பினர்.

தி. கு. சண்முகம், மையக்கூட்டுறவு வங்கி, சென்னை-4.

○ “தென்மொழி” “தமிழ்ச்சிட்டு” ஆகிய இரண்டு தாள்களையும் எங்கள் மாணவ மாணவிகள் எல்லாரும் படித்துப் பயன்பெறுகிறார்கள். தங்கள் உழைப்புக்கு என்றும் நற்பயன் கிடைக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

புலவர். தி. ந. பாலன். முதனிலைத் தமிழாசிரியர், தென்னேரி.

○ “தமிழ்ச்சிட்டே” உன்றன்பால் தண்டமிழைக் கண்டேன்!
தமிழறியாத் தருக்கர்க்குத் தண்ணளியை ஊட்டும்
கனித்தமிழின் கனிச்சுவையைக் கண்ணுற்றுக் களித்தேன்.
தமிழ்மொழியால் எல்லாமும் பயிற்றுவது ஒல்லா
என்பார்தம் கூற்றுக்குக் கூற்றாகப் போந்தாய்!

புலவர். திருத்துறைக்கிழார். திருத்துறைப்பூண்டி.

○ பெங்களூரில் வெற்றி நடைபோட்டுத் தமிழ்மணம் கமழச் செய்து வருகின்றது. வாழ்க தமிழ்ச்சிட்டின் பணி!

சே. டி. பரவசம். அலசூர், பெங்களூர்-8.

○ சிட்டே! என்றன் பைந்தமிழ்ச் சிட்டே!
தேனே தென்மொழி மலரின் இதழே!
தீங்கனி மாவே! குரும்பலாச் சுளையே!
நன்மலை வாழைப் பழத்தின் சுவையே!
குறுந்தாள் கொண்டு நடையிடு வண்டே!
உயிரே! நீயே வருக! வருகவே!

சு. வேல்முருகன், மதகடிப்பட்டு

# தமிழ்ச்சிட்டு

## தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–1 | தி. பி. ௧௯௯௭ ஐப்பசி (அக்டோபர்) | இசை–3

# கற்பவை கற்க

'கண்டதைப் படிக்கப் பண்டிதன் ஆகான்' என்ற பழமொழியைக் 'கண்டதைப் படிக்கப் பண்டிதன் ஆவான்' என்று பிழையாகச் சொல்லிக்கொண்டு, கல்வி கற்கின்ற மாணவர்கள் எல்லாரும் அச்சு ஆகி வருகின்ற தாள்கள், பொத்தகங்கள்எல்லாவற்றையும் வாங்கிப் படித்து வருகின்றனர். இவர்கள் இறுதியில் தங்கள் அறிவையும் வாழ்க்கையையுமே பாழாக்கிக் கொள்ளுகின்றனர்.

எப்படி கடைகளில் விற்கும் பண்டங்கள் அனைத்தையும் – நம் உடலுக்கு ஒத்துக் கொள்ளக் கூடியது – ஒத்துக் கொள்ளக் கூடாதது என்று பாராமல் நாம் வாங்கித் தின்னக் கூடாதோ, அப்படியே அச்சிட்டு விற்பவை எல்லாவற்றையும் நம் அறிவுக்கும் மனத்திற்கும் ஏற்றது – அல்லது ஏற்காதது என்று பாராமல் வாங்கிப் படிக்கக் கூடாது. உடலுக்குச் சேராத உணவு உடல் நலத்தைக் கெடுக்கும்.

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

உள்ளத்துக்குச் சேராத நூல்கள் உள்ள வளத்தைக் கெடுக்கும். நல்ல உடல் இல்லாதவன் எப்படி வாழ முடியாமல் நோயும் நொடியுமாகக் கிடந்து துன்புறுகின்றானோ, அப்படியே நல்ல உள்ளம் இல்லாதவனும் நன்றாக வாழமுடியாமல் விலங்காகவும், கயவனாகவும் இருந்து துன்புறுகின்றான்.


ஒருவனுக்கு நல்ல உடல் இருந்தும் நல்ல அறிவு இல்லாமற் போனால் அவனால் அவனுக்கும் கேடு. உலகத்துக்கும் கேடு. எனவே உடல் நலத்துக்காக எவ்வளவு கவனமாக இருக்கின்றோமோ, அதைவிட உள்ள நலத்துக்காகவும் அறிவு நலத்துக்காகவும் மிகமிகக் கவனமாக இருக்க வேண்டும்.

சிலபொழுது நம் உடலுக்குச் சேராததையோ, கேடு தருவதையோ தின்றுவிட்டால்கூட மருந்து கொடுததுத் தின்றதை வெளியில் எடுத்து விடலாம். அல்லது வரும் கேடுகளை மருந்து கொடுத்து நீக்கி விடலாம். ஆனால் நம் உள்ளத்திற்குத் தகாதவற்றை ஒருமுறை வாங்கிப் படித்து விட்டால், அவற்றை என்ன மருந்து கொடுத்தாலும் மறக்கடிக்க முடியாது. அவற்றால் வரும் கேடுகளையும் தடுத்துவிட முடியாது. ஆகையினால்தான் உண்ணப் போவதைவிட படிக்கப் போகும் பொருள்களின்மேல் மிகுதியான கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் சிறுவர்களாக இருக்கும்பொழுது நாம் தீயவற்றைப் படித்துப் பழகிக் கொண்டால் பிறகு அந்தப் பழக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது. எனவேதான் 'கற்பவை கற்க' என்று வள்ளுவர் கூறினார்.

படிக்கத் தெரிந்தது என்று கடைகளில் தொங்கும் கண்ட கண்ட தாள்களையும் மினுமினுப்பாக அச்சிட்ட பொத்தகங்களையும் வண்ண வண்ணமான படங்களையுடைய திரைப்படக் கதைக் குப்பைகளையும் வாங்கிப்படித்து நல்ல உள்ளங்களையும் வாழ்க்கையையும் பாழாக்கிக் கொள்ள வேண்டா என்று மாணவர்களையும் சிறுவர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சென்ற இடத்தால் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.



# உலகம் சுற்றுவோம்

## நிலா ஒப்பந்தம்!

நிலா உலகத்திற்குப் போக உலக நாடுகள் முயன்று வருகின்றன இல்லையா? இவ்வாறு அவ்வுலகத்திற்கும் பிற கோள்களுக்கும் போகின்ற நாடுகள் அங்குள்ள நிலங்களின் மீதோ அவற்றைச்சார்ந்த விண்வெளி மீதோ தங்கள் ஆட்சியுரிமையை நிலைநாட்டுவதில்லை என்ற உடன்பாட்டுக்கு உருசியாவும் அமெரிக்காவும் ஒப்புதல் கொடுத்துள்ளன. இந்த ஒப்புதலை ஏற்கனவே 28 நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. அவற்றுள் இந்தியாவும் ஒன்று. இந்த உடன்பாட்டை உலக ஒன்றிப்புக் கழகம் (ஐ. நா.) அமைத்துக் கொடுத்துள்ளது.

## செயற்கைக் காய், கனிகள்!

ஏராளமாகக் கிடைக்கும் ஒருவகைக் காட்டுப்புல்லிலிருந்து கால்நடைகளுக்குப் பயன்படும் ஊட்டமுள்ள ஒருவகைப் புதுப்புல்லை மாசுகோ வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது. அங்குள்ள பேராசிரியர் ஒருவர் மக்கள் உண்ணக்கூடிய புதுவகையான காய்கறிகள், பழங்கள் முதலியவற்றைக் கூட உருவாக்குவதற்குப் புதுமுறை ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்று கூறினார்.

## கல்லூரியில் தமிழ்!

அண்மையில் புதுதில்லியில் கூடிய கல்விக்குழு கல்லூரிகளில் அறிவியல், தொழில் நுட்பம் முதலிய பாடங்களைத் தாய் மொழியிலேயே சொல்லிக் கொடுப்பது சிறந்தது என்று அரசினர்க்குப் பரிந்துரை செய்துள்ளது.

## கடல் அலை மின்சாரம்!

எப்பொழுதும் கடலில் அலைகள் எழுந்தவண்ணமே இருக்கின்றன அல்லவா? அந்த அலைகளின் ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் பெறும் ஆராய்ச்சியைச் செய்து, அதில் வெற்றியும் அடைந்திருக்கின்றார் திருவாங்கூரைச் சேர்ந்த ஒருவர். இந்த ஆராய்ச்சியில் அவர் எட்டாண்டுக் காலம் ஈடுபட்டாராம்.




## 3. கழக நூல்கள்.

இக்காலத்தில் அங்கங்கே தமிழ் வளர்ச்சி மன்றங்களும் நூல் வெளியிட்டுக் கழகங்களும் இருக்கின்றன அல்லவா? இவை தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் தமிழ் நூல்களை எழுதியும், அச்சிட்டும், பரப்பியும் வருகின்றன. இல்லையா?

இவைபோலவே பழந்தமிழகத்திலும் தமிழ்க்கழகங்கள் இருந்தன. இவை மூன்று காலத்தில் இருந்தமையால் முக்கழகங்கள் எனப் பெயர் பெற்றன.

இவற்றில் முதல் இரண்டு கழகங்களும் குமரி முனைக்கும் இக்கால ஆத்திரேலியாவுக்கும் இடைப்பட்டதும், பிற்காலத்துக் கடல் கொண்டதுமான இலெமூரியா என்ற குமரிக்கண்டத்தில் இருந்தன. முதல் கழகம் குமரிக்கண்டத்தின் தெற்கில் இருந்த **தொன் மதுரையில்** இருந்தது. அது **காய்சின வழுதி** என்ற பாண்டிய அரசனால் நிறுவப் பெற்றது. அக் கழகத்தில் **549** புலவர்கள் இருந்து தமிழாராய்ச்சி செய்தனர். அவர்களுடன் அக்காலத்திருந்த **4449** புலவர்களும் அறிவு நூல்களை எழுதி வெளியிட்டனர்.

தொன்மதுரை கடலில் மூழ்கியவுடன் குமரிக்கண்டத்தின் நடுப் பகுதியில் பஃறுளியாற்றின் கரையில் இருந்த **கபாடபுரம்** என்னும் நகரில், இரண்டாவது கழகம் நிறுவப் பெற்றது. இதை நிறுவிய அரசன் **வெண்தேர்ச் செழியன்** என்ற அரசன். அக்கழகத்தின் கழகப் புலவர்கள் **59** பெயருடன் **370** புலவர்களும் சேர்ந்து தமிழ் மொழியை வளர்த்தனர்.

கடைக்கழகம் இப்பொழுதுள்ள மதுரையில் முடத்திருமாறன் என்ற பாண்டிய அரசனுல் நிறுவப்பெற்றது. அதில் 49 கழகப் புலவர் களும், 449வேறு புலவர்களும் இருந்து பல நூல்களை எழுதியுள்ளனர்.

முதலிரண்டு கழகங்களில் இருந்த புலவர்கள் எழுதிய நூல்கள் பெரும்பாலும் அழிந்துபோயின. அவற்றுள் இரண்டாம் கழகத்தில் எழுதப்பெற்ற தொல்காப்பியமே இப்பொழுது கிடைத்துள்ளது. இம் மூன்று கழகத்தில் இருந்த புலவர்களும் எழுதிய நூல்களுக்குத்தாம் கழக இலக்கியங்கள் என்று பெயர்.

அவற்றைப் பற்றிய பிற செய்திகளை இனி வரும் இதழ்களில் படிக்கலாம்.

## அடேயப்பா.! இவ்வளவு பேரா?

உலகத்தின் மக்கள் தொகை என்ன தெரியுமா? (1965-ஆண்டுக் கணக்குப்படி) 320 கோடியாகும். அதில்,

| | |
|---|---|
| சீனு | 60.0 கோடி. |
| இந்தியா | 47.0 கோடி. |
| சோவியத்து நாடுகள் | 28.8 கோடி. |
| அமெரிக்க நாடுகள் | 19.2 கோடி. |
| ஆசியாவில் மொத்தம் | 178.3 கோடி. |
| ஐரோப்பா | 44.1 கோடி. |
| ஆஃப்ரிக்கா | 30.3 கோடி. |

மக்கள் தொகை சீனுவில்தான் மிகுதி. அடுத்தபடி இந்தியாவில் தான் மிகுதி. இந்த இரண்டு நாடுகளிலும் உலகில் உள்ள மக்களில் மூன்றில் ஒரு பங்குப் பேர் வாழ்கின்றனர்!



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

## 3. பொருள் தெரிந்து பேசுங்கள் !

தமிழில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் பொருள் உண்டு. ஒவ்வொரு சொல்லுக்கும் வேர்ப் பொருளாவது, மூலப் பொருளாவது, காரணப பொருளாவது, வழக்கு(மரபு)ப் பொருளாவது இருக்கும். இவற்றைப் பற்றியும் இவற்றின் தன்மைகளைப் பற்றியும் போகப் போகத் தெரிந்து கொள்ளலாம்.

இவற்றை நீங்கள் தெரிந்து கொள்ளும் வரை, அவற்றைத் தெரிந்த பெரியவர்களிடமோ, ஆசிரியர்களிடமோ கேட்டுப் பயன் ப்டுத்துதலே கடமை. தெரியாமல் இருக்கும் வரை நாவடக்கத்தோடு இருப்பதே முறைமை.

சொற்களுக்குப் பொருள் தெரிந்து கொண்டால் அவற்றைப் பிழையாகப் பேச மாட்டோம் இல்லையா? பொருள் தெரியாமலேயே நாம் எவ்வளவு தவருகப் பேசுகிறோம் தெரியுமா?

தலைக்கு அணையாக வைத்துக்கொள்வது தலையணை. இதைத் தலகாணி என்கிறோம். இது பிழைதானே!

இதேபோல் குப்பையைத் துடைக்கும் கருவியாகிய துடைப் பத்தைத் துடப்பம் என்று எழுதுகின்றோம்.

மடையன் என்பது பிழை. மடயன் என்பதுதான் சரி. (மடம் மிகுந்தவன். மடம் – அறிவு மழுக்கம்)

உடமை என்பது தவறு. உடைமை என்பதே சரி. நாம் உடைய பொருள் உடைமை.

இடுப்போடு தொடுத்து வைத்திருத்தலால் தொடை என்று பெயர். இதைத் துடை என்று எழுதுவது பிழைதானே?

செய் என்ருல் வயல். நன்செய் என்ருல் நல்லவயல். அஃதாவது கறம்பாக இல்லாமல் நீர் பாய்ந்து நெல், கரும்பு, முதலிய பயிர்கள் விளையக்கூடிய வயலை நன்செய் என்று கூறுதல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் கம்பு, கேழ்வரகு முதலிய பயிர்கள் விளையக்கூடியதாகவும் நீர்வளம் சரியாக அமையாததாகவும் உள்ள வயலைப் புன்செய் என்பர். இவற்றை நஞ்சை, புஞ்சை என்றெல்லாம் பிழையாக எழுதி, பேசி வருகின்ருேமா? இல்லையா?

இவைபோலவே,

எண்ணெய் (எள் + நெய்) என்பதை எண்ணை என்பது பிழை.

கோத்தல் என்பதைக் கோர்த்தல் என்பது தவறு.

சமயல் என்பது பிழை; சமையல் என்பதே சரி.

கடமை என்பது தான் சரி; இதைச் சிலர் கடைமை என்று பிழையாக எழுதி வருகின்றனர்.

சுவரில் என்பதைப் பலரும் சுவற்றில் என்றே எழுதி வருகின்றனர். சுவர் + இல் எப்படிச் சுவற்றில் என்று ஆகும்.

எனவே சொற்களை அவற்றின் உண்மைப் பொருளை அறிந்து பயன்படுத்துதல் வேண்டும். (உ)

## குண்டு மணிக்குள் 300 யானைகள்

அண்மையில் வெளிநாடு ஒன்றில் நடைபெற்ற ஓர் அனைத்துலக பொருட்காட்சிக்கு இந்தியாவின் சார்பில் கேரள அரசினர் கைவினைப் பொருள்கூடம் வியப்பான ஒரு குண்டுமணியை அனுப்பியிருந்தது. அந்த உருண்டையான சிறிய மணிக்குள் 4 யானை மருப்பால் (தந்தம்) ஆன 300 யானைகளை அடைத்து வைத்திருந்தனராம். குண்டுமணியின் வாய்ப்புறத்தை வேறு இரண்டு யானைகளைக் கொண்டு அடைத்து வைத்திருந்தனராம். தென்னுட்டவரின் செதுக்குக் கலையைக் கண்டு வெளிநாட்டார் வியந்து போனுர்களாம். ஏராளமான குண்டு மணிகளை விற்பனைக்கு வேறு அனுப்பி இருந்தனராம். அத்தகைய ஒரு குண்டு மணியின் விலை உருபா 4-18 காசுதான்!




# மலை

வானைத் தொட்டு நிற்கின்றாயே மலையே—நீ
வளர்ந்த வகை என்ன வென்றே உரையே!

தூணைப் போல வானக் கூரை தாங்க—உன்னைத்
தூக்கி நிற்க வைத்த வர்கள் யாரோ?

கடலைத் தோண்டிப் போட்ட கல்லு மண்ணோ?—நீ
காற்றடித்துச் சேர்ந்த குவியல் தானோ?

இடம் பெயரா திருந்த விடத்தில் இருப்பாய்!—மேல்
ஏறிப் போகும் மாந்தர் நிலையைப் பொறுப்பாய்!

பறந்து திரியும் முகில்கள் உன்றன் மடியில்—வந்து
படுத்துத் தூங்கும் அழகு நல்ல அழகே!

இறங்கி வழியும் அருவி என்னும் குழந்தை—நீ
ஏந்திப் பெற்ற இன்பக் குழந்தை தானோ?

தேனிருக்கும்! கனியிருக்கும்! உன் மேல்!-நல்ல
தேக்கிருக்கும்! பாக்கிருக்கும்! துள்ளும்

மானிருக்கும்! மருந்திருக்கும்! உன்னால்—என்
மனத்திருக்கும் துன்பம் நீங்கும் மலையே!

துரை-மாணிக்கம்

# தமிழால் தெம்படா!

தன. சங்கரலிங்கம்.

கள்ளி சிந்தும் வெள்ளைப் பாலை
உள்ள மாகக் கொள்ளடா
ஏந்து கின்ற கொள்கை தாங்கி
மாந்த ரோடு செல்லடா

துள்ளு மெழில் அள்ளும் இளமை
உள்ள போதே கல்லடா!
துயர் வந்தாலும் தலையை நெஞ்சை
உயர்த்தி நிமிர்த்தி நில்லடா!

அன்பு நெறியில் பண்பு வழியை
இன்ப மாகக் காணடா!
அறிவுத் தாயை உறவு கொண்டு
குறையில் லாமல் பேணடா!

உண்மை பேசித் திறமை யாக
நன்மைச் செயலைச் செய்யடா!
ஒன்று மக்கள் ஒன்று நோக்கம்
என்று ஓங்கி உய்யடா!

தேன் கலந்த வான் தமிழில்
மூன்று பாலை அருந்தடா!
தேயம் போற்றும் நாயகன் நீ!
ஆய கலைகள் விருந்தடா!

கூன் பிறை போல் உடல் வளைந்து
சாண் வயிற்றுக் குழையடா!
கோடி மாந்தர் நலனை நாடி
ஓடி யாடிப் பிழையடா!

உடைமை காக்க அடிமை போக்க
மடமை யெண்ணம் நீக்கடா!
வெள்ளம் போல உள்ளம் பொங்கக்
கள்ளம் நீக்கி உழையடா!

# ஏழைப் பிள்ளைகளாக இருந்தால் என்ன?

நீங்கள் ஏழைப் பிள்ளைகளா? உங்கள் பெற்றோர் ஏழ்மையிலும் வறுமையிலும் இருந்து கொண்டே உங்களைப்படிக்க வைக்கின்றனரா? அப்படியிருந்தால் நீங்கள் அதைப் பற்றியெல்லாம் எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

நீங்கள் எந்த நிலையில் எப்படிப் பிறந்தீர்கள் என்பது பற்றி உலகம் கவலைப்படவோ மகிழவோ போவதில்லை. நீங்கள் எப்படி வாழ்ந்தீர்கள்? யாருக்காக இறந்தீர்கள்? என்பவற்றைப் பொறுத்துத் தான் உலகம் உங்களை மதிக்கும்; பாராட்டும்; புகழும்! இல்லாவிட்டால் இகழும்; தாழ்வாக மதிக்கும்.

ஏழையாகப் பிறந்து விட்டோமே என்று கவலைப்படுவதில் ஒரு பயனும் விளையப் போவதில்லை. அறிவும், ஊக்கமும், விடாமுயற்சி யுமே ஒருவரை உயர்த்தும். கோடிக்கணக்கான செல்வம் உடையவர் களுக்குப் பிறந்த பிள்ளைகளில் பலர் உருப்படியில்லாமல் போயிருக் கின்றனர். மிகுந்த வறுமையில் உள்ளவர்களுக்குப் பிறந்த பிள்ளை களில் பலர் உலகமே போற்றும் வண்ணம் வாழ்ந்து பெரும்புகழ் எய்தியிருக்கின்றனர்.

அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக விளங்கி, விலங்கினும் கீழாக-அடிமை மக்களாக நடத்தப் பெற்று வந்த நீகிரோ மக்களுக்கு விடுதலை அளித்த **ஆபிரகாம் லிங்கன்**, ஓர் ஏழை விறகு வெட்டியின் பிள்ளையே!

பிற்காலத்தில் உலகத்தின் பெரும் பணக்காரர்களில் ஒருவராகக் கருதப்பட்டவரும், ஏறத்தாழ நூறு கோடி அமெரிக்க 'டாலர்'களுக்கு மேல் பொருள் ஈட்டியதுமன்றி, அவற்றில் பாதிக்கு மேல் மக்கள் நன்மைக்காக வாரி வழங்கிப் புகழ் பெற்றவருமான **சான் டி. இராக் பெல்லர்**, தொடக்கத்தில் மாதம் 15 'டாலர்' சம்பளத்திலிருந்த ஓர் ஏழைக் கணக்கரின் மகனே! தம் ஓயாத உழைப்பால் அறிவியல் துறையில் ஏறக்குறைய 1400 கண்டு பிடிப்புகளைச் செய்தவரும் மின் சார விளக்கு, திரைப்படம், இசைத்தட்டு முதலிய பயனுள்ள கருவி களைச் செய்து, அழியாப் புகழ் பெற்றவருமான **தாமசு ஆல்வா எடிசன்**, அமெரிக்காவில் மிலான் நகரத்தில் படகு கட்டுகின்ற ஓர் ஏழைத் தொழிலாளியின் பையனே!

வேளாண்மைத் துறையில் அரும் பெரும் ஆராய்ச்சிகள் செய்து, பல அரிய பொருள்களைக் கண்டு பிடித்துப் பெரும் புகழ் பெற்றவரான சியார்சு வாசிங்டன் கார்வர் வெள்ளைக்காரர் ஒருவரிடம் அடிமையாகவும் ஏழைப் பணிப்பெண்ணாகவும் இருந்த நீகிரோ பெண் ஒருத்தியின் மகனே!

இயந்திரங்களின் அமைப்பு நிலைகளிலேயே தம் வாழ்க்கையைப் பெரிதும் ஈடுபடுத்தி, இயங்கிகளையும் உந்துகளையும் புது முறையில் அமைத்து உலகுக் களித்தவரும், அவ்வழியில் பெரும் பொருள் ஈட்டிப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பேணித், தொழில் துறையைப் பெரிதும் வளம்பெறச் செய்தவருமான என்றிபோர்டு என்பவர் அமெரிக்காவில் மிக்சிகன் மாநிலத்தில் வாழ்ந்த ஓர் ஏழைப் பண்ணையாளரின் பிள்ளையே!

பிற்காலத்தில் ஒளியம் (இரேடியம்) என்னும் தனிமத்தைக் கண்டுபிடித்த பெண்மணியும், இருமுறை 'நோபல் பரிசு' பெற்றவருமான அறிவியல் பேராசிரியை மேரி கியூரி, போலந்தில் ஓர் ஏழை உழவர் குடும்பத்தில் பிறந்து, உருசியாவில் ஒரு செல்வக் குடும்பத்தில் 13 அகவை வரை வேலைக்காரப் பெண்ணாக இருந்து துன்புற்றவரே!

உலகம் வியக்கத்தக்க வகையில் அறிவியல் புதுமைகள் பல புரிந்து அழியாப்புகழ் பெற்ற மைக்கேல் பாரடே, இங்கிலாந்தில் இரும்பு வேலை செய்த ஓர் ஏழைக் கருமாரின் மகனே!

இறுதிவரை சளைக்காமல் போராடி ஆத்திரியாவின் ஆட்சிப் பிடியிலிருந்து இத்தாலியை விடுவிக்கப் போராட்டங்கள் பல புரிந்து வெற்றியடைந்த மாபெரும் விடுதலை மறவன் சோசப் கரிபால்டி, பிரான்சு நாட்டில் நீசு என்ற கடற்கரையில் மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்த ஓர் ஏழைச் செப்படவரின் மகனே!

அரசியலிலும் மக்கள் சீர்திருத்தத்திலும் சிறந்துவிளங்கி மங்காத புகழ்பெற்ற பெஞ்சமின் பிராங்கிளின் மெழுகுத்திரி செய்து வாழ்க்கை நடத்தி வந்த ஓர் ஏழைத் தொழிலாளியின் பிள்ளையே!

இங்கிலாந்தில் பிறந்து உலகின் சிறந்த கதை ஆசிரியர்களில் ஒருவரெனப் புகழப்பெற்ற சார்லசு டிக்கன்சு, கடனுக்காகக் கடுஞ் சிறைப் பட்ட ஓர் ஏழை எழுத்தரின் மகனே!

உலகம் வியந்து புகழ்கின்ற நாடகாசிரியரும் பாவலருமான சேக்சுபிரியர் குதிரைக் கொட்டடியில் வேலை செய்த போக்கற்ற ஓர் ஏழைப் பையனே!

முதன் முதல் ஆங்கிலப் பேரகரமுதலி (Dictionary) எழுதி ஆங்கில இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் பெருந்தொண்டு செய்து புகழ்பெற்ற சாமுவேல் சான்சன், இலண்டனில் பழைய பொத்தகம் விற்றுப் பிழைத்து வந்த ஓர் ஏழையின் மகனே.

அமெரிக்க நாடகத் துறையிலும் நடிப்புத்துறையிலும் மிகச் சிறந்த கலைஞராகப் போற்றப் பெற்ற வில் ரோசர்சு தொடக்கத்தில் ஒரு மாட்டுக்காரப் பையனே!

காந்தத்திலிருந்து மின்சாரம் உண்டாக்குவதைக் கண்டுபிடித்த மைக்கேல் பார்டே இலண்டனில் வாழ்ந்த ஓர் ஏழைக் கருமானின் மகனே!

மின்சாரத் துறையில் சிறந்து விளங்கியவரும் அறிவியல் பேராசிரியருமான சோசப்பு என்றி நியூயார்க்கு மாநிலத்தில் வாழ்ந்த கல்வியறிவற்ற ஓர் ஏழை உழவனின் மகனே!

சுரங்கங்களில் பயன்படும் ஆவி விளக்குகளைக் கண்டு பிடித்தவரும், மின்சாரத் துறையில் பல புதுக் கண்டுபிடிப்புகளைச் செய்தவருமான அம்பரி டேவி என்பவர் ஓர் ஏழைத் தச்சரின் பிள்ளையே!

உருசிய நாட்டின் தலைவராக இருந்த சோசப்பு இசுடாலின் செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளியின் மகனே!

இந்தியாவின் இரும்பு நெஞ்சன் என்று போற்றப் பெற்ற சர்தார் வல்லபாய் படேல் ஓர் ஏழை உழவரின் பிள்ளையே!

இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்ட தலைசிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமான பால கங்காதர திலகர் ஓர் ஏழைத் தொடக்கப்பள்ளி ஆசிரியரின் மகனே!

இந்தியாவின் அரசியல் சட்டத்தையே உருவாக்கித்தந்த சட்ட வல்லுநரும் பேரறிஞருமான பீமராவ் அம்பேத்கார் மிகவும் தாழ்த்தப் பட்ட குடியில் ஏழையாகப் பிறந்த ஒருவரே!



# குட்டிக்கதை

## அன்பும் பழமும்

பாரசீகத்தில் ஓர் அரசர் இருந்தார். அவர் அவையில் புலவர் ஒருவர் இருந்தார். புலவரிடம் அரசருக்கு மிகுந்த அன்பு. அடிக்கடி அரசர் புலவரை அழைத்து நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பார். ஒருநாள் தோட்டக்காரன் ஒருவன் தன் தோட்டத்திற் பழுத்த வெள்ளரிப் பழங்களில் பெரியதான ஒன்றை அரசருக்குப் பரிசாகக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனான். அரசர் புலவரை அழைத்தார். அந்த வெள்ளரிப் பழத்தைப் பற்றியும் அதைக் கொண்டுவந்து கொடுத்த தோட்டக்காரனின் அன்பைப் பற்றியும் புலவரிடம் கூறிக்கொண்டே வெள்ளரிப்பழத்தை அறுத்து ஒரு துண்டைப் புலவரிடம் கொடுத்து அன்போடு "உண்ணுங்கள்" என்றார். புலவரும் அதை நன்றியுடன் வாங்கி அருந்துகையில், அரசர் புலவரைப் பார்த்து, "எப்படி இருக்கின்றது?" என்று கேட்டார்.

---

முன்பக்கத் தொடர்ச்சி.

இப்படி ஏழைப் பிள்ளைகளாக இருந்து தம் அறிவுனாலும், கடும் உழைப்பாலும், விடாமுயற்சியினாலும் புகழ் பெற்று விளங்கும் பெரியோர்கள் வரலாற்றில் எண்ணற்றவர்.

இவர்களெல்லாரும் தாம் ஏழைகளாகவும் குமுகாயத்தில் தாழ்வான நிலையில் மதிக்கப் பெற்றவர்களாகவும் பிறந்துவிட்ட காரணத்திற்காக வருந்திக் கொண்டு இருந்திருந்தால் இன்று மக்களால் போற்றப் பெறுவார்களா? எனவே உங்களில் யாராவது ஏழையாய்ப் பிறந்து விட்டதற்காக வருந்தி மனம் சோர்வுற்றுக் கிடப்பதில் பயனில்லை. கல்வியைக் கண்ணெனப் போற்றுங்கள். அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்; ஓயாமல் உழைத்து உண்மைக்காகவும் இந்த உலகத்திற்காகவும் அயராமல் பாடுபடுங்கள். வெற்றி உறுதி!

எக்குடிப் பிறப்பினும், யாவரே ஆயினும்<br>
அக்குடியில் கற்றோரை, 'மேல் வருக!' என்பர்.

"மிகவும் சுவையாக இருக்கின்றது" என்ருர் புலவர் "அவ்வாருஞல், இந்தாருங்கள் இதையும் சாப்பிடுங்கள்" என்று கூறி மேலும் ஒரு பெரிய துண்டைப் புலவர் கைகளில் வைத்தார். அதை வாங்கிப் புலவர் அருந்துகையில் 'இப்பொழுது எப்படி இருக்கின்றது?' என்று அரசர் மீண்டும் கேட்டார். புலவர், "மிக மிகச் சுவையாக இருக்கின்றது!" என்று மீண்டும் சொன்னுர். அதன்பின் அரசர் மேலும் மேலும் ஒவ்வொரு துண்டாகப் புலவரிடம் கொடுப்பதும் அவற்றைப் புலவர் உண்ணுகையில் எப்படி இருக்கின்றது என்று கேட்பதுமாக இருந்தார். புலவரும் "மிகவும் சுவையாக இருக்கின்றது" "மிக மிகச் சுவையாக இருக்கின்றது" என்று சொல்லிக்கொண்டே அவற்றை ஒவ்வொன்ருக வாங்கி உண்டார். புலவர் மகிழ்வோடு உண்பதை அரசர் பார்த்து மிகவும் மகிழ்ந்தார்

இறுதியாக மிகுந்த ஒரு துண்டை அரசர் "இஃது எனக்கு" என்று கூறி நகைத்துக் கொண்டே வாயில் போட்டார். பழம் ஒரே கசப்பாக இருந்தது. வாயில் வைக்க முடியவில்லை. அரசருக்கு முகமே மாறிவிட்டது. புலவர்பால் மிகுந்த இரக்கமும் தன்பால் மிகுந்த வருத்தமும் கொண்ட குரலில் புலவரை நோக்கி, "மிகவும் சுவையாக இருக்கின்றது என்று சொன்னீர்களே!" என்று கேட்டார்.

உடனே புலவர், "நான் பழத்தைச் சொல்லவில்லையே உங்களுடைய கள்ளம் கவடற்ற அன்பையன்ருே சொன்னேன்" என்ருர்.

அரசர் புலவரின் தூய்மையான அன்பை எண்ணி மிகவும் மகிழ்ந்தார்.

## உலகின் கண்டங்களும் அவற்றின் பரப்பளவும்.

| | | |
|---|---|---|
| ஆப்பிரிக்கா. | 1,16,99,000 | கற்பெருக்கம். |
| அன்டார்டிகா. | 53,00,000 | ,, ,, |
| ஆசியா. | 1,86,85,000 | ,, ,, |
| ஆத்திரேலியா. | 29,71,081 | ,, ,, |
| ஐரோப்பா. | 20,85,000 | ,, ,, |
| வட அமெரிக்கா. | 94,35,000 | ,, ,, |
| தென் அமெரிக்கா. | 68,60,000 | ,, ,, |

# தெரிந்து கொள்ளுங்கள்

O இப்பொழுது உலகில் உள்ள மக்கள் தொகை 330 கோடி.

O திக்குவாய் உள்ளவர்கள் காலையில் வெறும் வயிற்றில் ஒரு தேக் கரண்டியளவு தேனுடு கொஞ்சம் தண்ணீர் கலந்து அருந்தி வருவார்களானுல் திக்குவாய் நீங்கும்.

O 'அவைகள்' என்று எழுதுவது பிழை. அவை என்பதே பன்மை.

O ர, ரா, ரு, ரோ ஆகிய எழுத்துகளை முதலாகக் கொண்ட வட சொற்களையோ பிறமொழிச் சொற்களையோ தமிழில் எழுதும் பொழுது அவற்றின் முன் முறையே அ, இ, உ, உ என்ற உயிரெழுத்துகளைச் சேர்த்தே எழுதுதல் வேண்டும். எடுத்துக்காட்டு: அரத்தினம், இராமன், உருசியா, உரோமம்.

O கொய்யாப்பழத்தை மிகுதியாக உண்ணுதல் கூடாது. அது தலை மயக்கம், மந்தம், வயிற்றுப் பொருமல் முதலியவற்றை உண்டாக்கும். மலச்சிக்கலை உண்டாக்கும்.

O வானில் தெரியும் விண்மீன்களில், வெள்ளை நிறமுள்ளவை மிகவும் சூடு வாய்ந்தனவாகவும், சிவப்பு நிறமுள்ளவை அவற்றினும் குறைந்த சூடு வாய்ந்தனவாகவும், நீல நிறமுள்ளவை அவற்றினும் குறைந்த சூடு வாய்ந்தனவாகவும், மஞ்சள் நிறமுள்ளவை எல்லாவற்றினும் மிகவும் குறைந்த சூடு வாய்ந்தனவாகவும் உள்ளன.

O உலகத்தில் பிறக்கும் பிறப்புகளில் ஏறத்தாழ 90 க்கு ஒன்று இரட்டைப் பிள்ளைகளாகவும்,7,103க்கு ஒன்று மூன்று பிள்ளைகளாகவும், 7,57,000 க்கு ஒன்று நான்கு பிள்ளைகளாகவும், 4,16.00,000 க்கு ஒன்று ஐந்து குழந்தைகளாகவும் பிறப்பதாகக் கணக்கிட்டு இருக்கின்றனர்.

O வீடுகளில் உள்ள எலிகளைப் பிடிக்க நாம் பூனை வளர்க்கின்ருேம் இல்லையா? பிலிப்பைன் தீவுகளில் உள்ள மக்கள் எலிகளைப் பிடிக்க ஒருவகைப் பாம்பை வளர்க்கின்ருர்கள். பெட்டிகளில் அடைத்து வைத்த அவற்றைத் தேவையான பொழுது திறந்து விட்டு விடுகின்ருர்களாம்.




சென்ற மாதக் கணக்கின் விடை: 9 மணி நேரம்.

இம்மாதப் புதிரைத் தமிழ்த்தம்பிகள் இருவர் எழுதியுள்ளனர்.

புதிர்: 1.

ஒரு கூட்டில் சில முயல்களும் சில புறாக்களும் இருந்தன. ஒருவர் அவற்றின் உரிமையாளரிடம் போய் "இக்கூட்டில் எத்தனை முயல்கள் எத்தனைப் புறாக்கள் உள்ளன?" என்றார். அவர் அதற்கு நேரிடையாக விடை கூறாமல், "இக்கூட்டில் உள்ளவற்றின் கால்களை எண்ணிப் பார்த்தால் 98-ம் அவற்றின் தலைகளை எண்ணிப் பார்த்தால் 35-ம் இருக்கும்" என்றார். அப்படியென்றால் அக்கூட்டில் எத்தனை முயல்கள் எத்தனைப் புறாக்கள் இருந்திருக்கும்?

இப்புதிரைப் போட்டிருக்கும் தம்பி: த. தியாகராசன், நாணல்மேடு

புதிர்: 2.

நானும் என் தங்கையும் முற்றத்தில் விளையாடிக்கொண்டு இருந்தோம், அப்பொழுது எங்கள் தந்தை ஒரு சிறு பை நிறைய என்னவோ கொண்டு வந்தார். நாங்கள் என்னவென்று ஆவலோடு பார்த்தோம். அவர் எங்களை அருகில் அழைத்துப் பையில் இருந்தவற்றைப் பலகையில் கொட்டினார். அத்தனையும் பளபளவென்று ஒளிரும் செம்பவழங்கள். அவர் எங்களை நோக்கிக், "குழந்தைகளே! இந்தப் பவழங்களைக் கொண்டு மாலைகள் கட்டவேண்டும். எத்தனை மாலைகள் என்று நான் சொல்லமாட்டேன். ஒரு மாலைக்கு எத்தனைப் பவழங்கள் கோக்கின்றீர்களோ அத்தனை மாலைகள் இருக்கவேண்டும். கட்டுங்கள் பார்க்கலாம்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் நாங்கள் 'திருதிரு' வென்று விழித்தோம். பவழங்களை எண்ணினோம் சரியாக 6561 பவழங்கள் இருந்தன. எத்தனை மாலைகள் கட்டுவது என்று புரியாமல் விழித்தோம். உங்களுக்குத் தெரிகிறதா பாருங்கள்.

இப் புதிரை போட்டிருப்பவர்: முழுமுதல்வன், புதுவை.

இவ்விரண்டு புதிர்களின் விடைகளையும் அடுத்த இதழில் பாருங்கள்.



# எங்கள் விருப்பம் என்ன?

○ தமிழ் இலக்கணங்களை மாணவர்கள் பயிலும் வண்ணம் இதழ்தோறும் வெளியிடல் வேண்டும். பாட்டு, கட்டுரை எழுதும் முறைகளை மாணவர்களுக்குப் பயிற்றுங்கள். இவை "தமிழ்ச்சிட்டில்" வெளிவருமா?

சி. இராசரத்தினம், அம்பிகாபுரம், மேலப்பாளையம்.

○ "தமிழ்ச்சிட்டு" எங்களுக்குப் பொன்சிட்டு; அறிவின் வளர்ச்சிக்கு ஒரு மின்சிட்டு! தமிழ்ப் பண்பாட்டுக் குடியில் பிறந்த இளம் மாணவர்கள் ஒரு சிலரைத் தவிர, உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர் பலரிடம் கல்வி முறையின் குறைதானோ என்னவோ, நல்ல பல அறிவுக் கருத்துகள் நிரம்பிய பண்பாட்டுணர்வு அறவே இல்லை. வெண்சுருட்டுப் பழக்கமும் திரைப்பட நாட்டமும்தாம் எங்களைச் சூழ்ந்துள்ள இளம் மாணவர்களின் நாகரிகப் பண்பாடாக(!) இருக்கின்றது. என்னதான் நல்ல முறையில் - நட்பு முறையில் எடுத்துச் சொன்னாலும் பயன் இல்லாமல் இருக்கின்றது. நம் பண்பாட்டிற்கு ஒவ்வாத பழக்கவழக்கங்களை மேற்கொள்ளாதிருக்கவும் சிற்றின்பக் கேளிக்கைப் பாடல்களே நிறைந்து நம் பண்பாட்டினைக் குலைத்துவரும் திரைப்படங்களைப் பார்க்காதொழியவும், நல்ல பல முறையில் மனம் திருந்தும்வண்ணம் அறிவுரைகளும் "தமிழ்ச்சிட்டில்" வெளிவர வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன். பின்னர்தான் என்போன்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் மனவளர்ச்சி ஓரளவு நல்ல முறையில் திருப்பம் பெறும்; பண்பாட்டுணர்வும் நல்லறிவும் ஏற்படும்! வளர்க **தமிழ்ச்சிட்டு** வாழ்க **தென்மொழி.**

காசி. தேனிசையன்,

பார்த்தசாரதி நகர், பெரம்பூர்; சென்னை - 11.

 பதிவு எண் எம். 8151

# மாணவர்க்கான மணிமொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே;

- உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது! அதனை மலரச் செய்வதே வாழ்க்கை என அறிந்து கொள்ளுங்கள்.

- ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் தவறுமல் கடைப்பிடியுங்கள்.

- நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித் தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள் ளுங்கள்.

- பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர் களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய் யுங்கள்.

- நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப் படங்களில் வீணுக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள் ளாதீர்கள்.

- எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.

- பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.

- உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.

- சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதி லும் இன்பம் காணுங்கள்.

- இறுதியாக, உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயக மாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.